ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 1.5 – கலையும் கரியும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.5 – கலையும் கரியும்

‡ கலையும் கரியும் பரிமாவும் ⋆
திரியும் கானம் கடந்து போய் ⋆
சிலையும் கணையும் துணை ஆகச் ⋆
சென்றான் வென்றிச் செறுக் களத்து ⋆
மலை கொண்டலை நீர் அணை கட்டி ⋆
மதிள் நீர் இலங்கை வாள் அரக்கர் தலைவன் ⋆
தலை பத்தறுத்துகந்தான் ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.1** ॥

கடம் சூழ் கரியும் பரிமாவும் ⋆
ஒலி மாந் தேரும் காலாளும் ⋆
உடன் சூழ்ந்தெழுந்த கடி இலங்கை ⋆
பொடியா வடி வாய்ச் சரம் துரந்தான் ⋆
இடம் சூழ்ந்தெங்கும் இரு விசும்பில் ⋆
இமையோர் வணங்க மணம் கமழும் ⋆
தடம் சூழ்ந்தெங்கும் அழகாய ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.2** ॥

உலவு திரையும் குல வரையும் ⋆
ஊழி முதலா எண் திக்கும் ⋆
நிலவும் சுடரும் இருளும் ஆய் ⋆
நின்றான் வென்றி விறல் ஆழி வலவன் ⋆
வானோர் தம் பெருமான் ⋆

மருவா அரக்கர்க்கெஞ்ஞான்றும் சலவன் ⋆
சலம் சூழ்ந்தழகாய ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.3** ॥

ஊரான் குடந்தை உத்தமன் ⋆
ஒரு கால் இரு கால் சிலை வளையத் ⋆
தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் ⋆
வற்றா வரு புனல் சூழ் பேரான் ⋆
பேர் ஆயிரம் உடையான் ⋆
பிறங்கு சிறை வண்டறைகின்ற தாரான் ⋆
தாரா வயல் சூழ்ந்த ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.4** ॥

அடுத்தார்த்தெழுந்தாள் பில வாய் விட்டலற ⋆
அவள் மூக்கயில் வாளால் விடுத்தான் ⋆
விளங்கு சுடர் ஆழி ⋆
விண்ணோர் பெருமான் நண்ணார் முன் ⋆
கடுத்தார்த்தெழுந்த பெரு மழையைக் ⋆
கல் ஒன்றேந்தி இன நிரைக்காத்தடுத்தான் ⋆
தடம் சூழ்ந்தழகாய ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.5** ॥

தாய் ஆய் வந்த பேய் உயிரும் ⋆
தயிரும் இழுதும் உடன் உண்ட வாயான் ⋆
தூய அரி உருவில் குறளாய்ச் சென்று ⋆
மாவலியை ஏயான் இரப்ப ⋆
மூ அடி மண் இன்றே தா என்று ⋆
உலகேழும் தாயான் ⋆

காயா மலர் வண்ணன் ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ‖ **1.5.6** ‖

ஏனோர் அஞ்ச வெம் சமத்துள் ⋆
அரி ஆய்ப் பரிய இரணியனை ⋆
ஊன் ஆர் அகலம் பிளவெடுத்த ⋆
ஒருவன் தானே இரு சுடர் ஆய் ⋆
வான் ஆய் தீ ஆய் மாருதம் ஆய் ⋆
மலை ஆய் அலை நீர் உலகனைத்தும் தான் ஆய் ⋆
தானும் ஆனான் தன் ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ‖ **1.5.7** ‖

வெந்தார் என்பும் சுடு நீறும் ⋆
மெய்யில் பூசிக் கை அகத்து ⋆
ஓர் சந்தார் தலை கொண்டுலகேழும் ⋆
திரியும் பெரியோன் தான் சென்று ⋆
என் எந்தாய் ! சாபம் தீர் என்ன ⋆
இலங்க முது நீர்த் திரு மார்பில் தந்தான் ⋆
சந்தார் பொழில் சூழ்ந்த ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ‖ **1.5.8** ‖

தொண்டாம் இனமும் இமையோரும் ⋆
துணை நூல் மார்பின் அந்தணரும் ⋆
அண்டா எமக்கே அருளாய் என்று ⋆
அணையும் கோயில் அருகெல்லாம் ⋆
வண்டார் பொழிலின் பழனத்து ⋆
வயலின் அயலே கயல் பாய ⋆

தண் தாமரைகள் முகம் அலர்த்தும் ⋆
சாளக்கிராமம் அடை நெஞ்சே ॥ **1.5.9** ॥

‡ தாரா ஆரும் வயல் சூழ்ந்த ⋆
சாளக்கிராமத்தடிகளை ⋆
கார் ஆர் புறவின் மங்கை வேந்தன் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
ஆரார் உலகத்தறிவுடையார் ⋆
அமரர் நல் நாட்டரசாளப் ⋆
பேர் ஆயிரமும் ஓதுமின்கள் ⋆
அன்றி இவையே பிதற்றுமினே ॥ **1.5.10** ॥

அடிவரவு — கலை கடம் உலவு ஊரான் அடுத்து தாய் ஏனோர் வெந்தார் தொண்டு தாரா வாணிலா

கலையும் கரியும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்